வரையறை செய்தால் உறுப்பினர்களுக்குக் கேள்வி கேட்பதற்கு வசதியாக இருக்கும். இப்பொழுது அமைச்சர் விரும்பினல் வினக்களை பிறிதொரு நாளைக்குத் தள்ளிப்போடப்படுவதைப் போல உறுப்பினர்களும் விரும்பினல் வினக்களைத் தள்ளிப் போடுவதற்கு விதிமுறை ஏதாவது பின்பற்றப்படுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கனம் உறுப்பினர்கள் கொஞ்சம் நேரம் கழித்து வருவதற்கு எப்படி உரிமை இருக்கிறதோ, அப்படியே அமைச்சர்களுக்கும் எங்களுடைய வினக்களைத் தள்ளிப் போடுங்கள் என்று கேட்கும் உரிமை இருக்கிறது. பின்னல் தள்ளிப் போடுங்கள் என்று கேட்ட வினக்கள் ஒத்தி வைக்கப்பட்டு, அடுத்த கேள்வி கேட்பது முறையாக இருந்து வருகிறது.

திரு. சா. மெய்யப்பன் : தள்ளிப் போடப்படும் வினக்களை அடுத்த நாளைக்கு அல்லாமல் அன்றே மீண்டும் எடுத்துக் கொள்ளும் உரிமை சபாநாயகருக்கு எந்த விதிமுறைகளின்கீழ் தரப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கு விதிமுறையில் இடம் இருக்கிறது. எந்த விதி என்பதை நான் நாளைக்குக் கூறுகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் எடுத்திருக்கும் பிரச்சினை சாதாரண பிரச்சினை அல்ல. விதி 35 (5)-ல்

"The Speaker, may, at the request of the concerned Minister postpone one or more questions entered in the list of questions for a day to a subsequent date." என்று இருக்கிறது. இதிலுள்ள பிரச்சினை என்னவென்றால், அமைச்சர்களின் வரிசைப் படி வினக்கள் வருகின்றன. முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய வினக்களைப் பின்னல் தள்ளிப் போடும்படி விருப்பப்படுவதாகத் தெரிகிறது. நாம் நமக்குள்ள சௌகரியத்தை உத்தேசித்து ஒரு அட்ஜஸ்ட்மெண்ட்செய்து கொள்கிறோம். முதலமைச்சர் அவர்களுடைய வினக்கள் வரும் நாளெல்லாம் நேரம் கழித்தே வரலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு)

3. ஒரு மணி நேர விவாதக் கோரிக்கை.
சீரணிக்கு எதிராகத் திரட்டப்படும் அணி.

THIRU K. VINAYAKAM : I wanted to put a supplementary question about "Prosperity Brigade", about which there was a question in the morning but you, Sir did not allow me to put my supplementary question. The Hon. Deputy Speaker was not willing to accede to my request. That matter is a very urgent and important matter of public importance. There are conflicting views about this brigade. When we were talking about 'Prosperity

1968 ஆகஸ்ட் 21] [Thiru K. Vinayakam]

Brigade', there was talk about "வெண் புறு" and the Hon. Chief Minister jocularly remarked that as that were "புறுக்கள்" they might have flown. That does not satisfy the questioner or the people who want more information. So I request the Hon. Deputy Speaker to allot one hour to debate on "Prosperity Brigade" as well as "anti Prosperity Brigades."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பேரவையிலே மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டு, நான்கு நாட்கள் விவாதத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சமயத்தில் அந்தக் கருத்துக்களை யெல்லாம் சொல்லிக் கொள்ளலாம். இப்பொழுது உங்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாததற்கு வருந்துகிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

வட ஆர்க்காடு தேசிய உழவர்களின் அமைதியான போராட்டமும் திரு. சகாதேவக் கண்டர் உண்ணாவிரதமும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்தபடியாக, திரு. கே. விநயகம் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

"To discuss about the peaceful agitation launched by national agriculturists of North Arcot headed by Thiru S. M. Annamalai, who was arrested and released later on 17th August 1968 and on 19th August 1968 headed by Sri K. Sahadeva Kandar, M.L.A., who subsequently went on fasting before the Fort St. George."

இது அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டதாகும். சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம், கைது செய்வது போன்றவற்றிற்காக ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டு, பேரவையில் அதை அனுமதித்துத் தீர்ப்புக் கொடுக்கப்பட்டதாக இல்லை. இது அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாகையால் இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

5. அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, ஒரு நாளைக்கு இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்தான் கொண்டு வரலாம் என்ற விதி இருந்து வருகிறது. மூன்று கவன ஈர்ப்புத் தீர்மானங்கள். கொண்டுவர, பேரவை அனுமதியளிக்கத் தீர்மானம் கொண்டுவரும்படி, அவை முன்னவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே,

"விதி 41 (3)-ன் படி, ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவர தடை இருப்பதை இன்று தளர்த்த வேண்டும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.